★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 20 சதம் ★ 'PHONE: [illegible]

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 5௳ திங்கள் (18—6—56) ★ ★ வெளியூர்: ஆனி 6௳ செவ்வாய் (19—6—56) [illegible]

ஆந்திராவில் நிலச் சீர்திருத்த சட்[டம்]

கர்நூல், ஜூன் 17—

அக்டோபர் மாதத்தில் மாநிலங்கள் திருத்[illegible] கப்படுவதற்கு முன்னாலேயே நிலச்சீர்திருத்தச் சட்ட[த்தை] நிறைவேற்றுவது என்று ஆந்திர அரசாங்கம் முடிவு செய்[து] விட்டது.

ஆந்திர மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான ரயத்[து] வாரி முறை இருக்கும்படி செய்யவும் முடிவு செய்யப்பட் டிருக்கிறதாம்.

அடுத்து நடைபெறும் சட்டசபைக் கூட்டத்தில் சட் டம் உருவாக்கப்படுமெனத் தெரிகிறது.

'ஓட்டு பிச்சை கேட்க தென்பாண்டி பகுதியில் நான் நுழையவில்லை'

'நாட்டு விடுதலைப் படையில் அணிவகுக்க திண்தோள் வீரர்களை அழைக்கவே வந்துள்ளேன்'

'உரிமையோடு ஆண்ட தாயகத்தை மீட்க ஏராளமான வீரர்கள் தேவை'

கோட்டை வாயிலை முன்புறத்தே கொண்ட அரண்மனை வாயில்முன் அண்ணா இலட்சிய முழக்கம்

இராமநாதபுரம் தொகுதி மக்கள் புதியதோர் விழிப்புணர்வு பெற்றனர்

"தென்பாண்டி மண்டலத்தில், கேவலம் ஓட்டுப் பிச்சைக் கேட்க அல்ல நான் வந்தது; நாட்டு விடுதலைப் படையில் சேர தீரர்களை—திண்தோள் வீரர்களை அழைக்க நான் இங்கு வந் திருக்கிறேன்.

"முப்பெரும் தமிழ் மன்னர்கள்—முடியுடைவேந்தர்கள் கொடிகட்டி, கோட்டை அமைத்து உரிமையோடு ஆண்ட தமிழகத்தை—தாயகத்தை—திராவிடத்தை வடவர் பிடியி லிருந்து மீட்க, தென்பாண்டி மண்டலத்திலிருந்து வீரர்கள் ஏராளம் தேவை! வீரத்தின் விளைநிலமான இப்பகுதியில் அந்த வீரர்கள் ஏராளமாக இன்றும் இருக்கிறார்கள்; 'அவர்கள் எல்லாம், என்றுமே எவருக்கும் அடிமைப்பட்டிராத திராவிடம், இன்று வடவருக்கு அடிமைப்பட்டிருக்கிறது என்பதால், அந்த அடிமைத் தளையை அறுக்க திராவிட முன்னேற்றக் கழகத்தில் அணி வகுத்து நிற்க வேண்டும்,' என்று கேட்பதற்காகவே இங்கு வந்திருக்கிறேன்,"

—என்று, அண்ணா அவர்கள், முகவை (இராமநாதபுரம்) நகர தி மு கழகச் சார்பில், 14—6—56 மாலை நடைபெற்ற பெரியதோர் பொதுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அண்ணா அவர்கள் மேற்கொண் டிருக்கும் சுற்றுப் பயணத்தின் முதல் நாள் நிகழ்ச்சி, முகவையில் துவங்கிற்று.

அண்ணா அவர்களின் வருகையை ஒட்டி, முகவை நகர தி மு. கழகத் தோழர்களும், இராமநாதபுரம் வட் டத்தில் உள்ள எண்ணற்ற கிளைக் கழகத்தவரும் மிகச் சிறப்பான வர வேற்பு ஏற்பாடுகளைச் செய்திருந் தனர்.

முகவை நகரின் வரலாற்றில் இதுபோல, எப்பொழுதும், வேறெந்த அரசியல் இயக்கத் தலை வருக்கும், வரவேற்பு அளிக்கப் பட்டதில்லை. அந்த அளவுக்கு ஊர் முழுவதிற்கும் விழாக் கோலம் பூசியிருந்தனர், கழகத் தோழர்கள்

ஊரினுள் நுழையும்போதே அண்ணா அவர்களை, 'தமிழ் காக்க, தாயகம் மீட்கப் போரிடும் எங்கள் தலைவா, வருக' என்ற வரவேற்பு வளைவு, வரவேற்றது. ஊர் முழு வதும்—பிரதான வீதிகள்தோறும், எண்ணற்ற வரவேற்பு வளைவுகள் இதுபோல அமைக்கப்பட்டு, நகர் முழுதும் கழகக் கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டு, அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால், அழிவு பல வற்றிற்கு ஆளாகிக்கிடந்த முகவை நகரம் புதிய சோபையுடன் காட்சி தந்தது.

பல்லாண்டுகளாகவே அண்ணா அவர்களின் வருகைக்காக, ஏங்கி கிடந்ததாலும், திருச்சி மாநில மாநாட்டிற்குப் பிறகு, அண்ணா அவர்கள் மேற்கொள்ளும் முதற் சுற்றுப்பயணம் என்பதாலும், முகவை மக்கள் மிகுந்த ஆவலோடு காலை முதலே நகரின் பிரதான வீதிகளில் கூடிக்கூடி நின்று, கூட் டம் பற்றியே பேசிக்கொண்டிருந் தனர்.

இராமேசுவரம், தனுஷ்கோடி, மண்டபம், கிழக்கரை, இராஜ சிங்கமங்கலம், தேவிபட்டணம், புதுவலசை, எமனேசுவரம், உத்திர கோசமங்கை, எட்டியல், சத்திரக் குடி முதலிய பல சுற்றுவட்டார ஊர்களிலிருந்தெல்லாம் மக்கள், கூட்டம் கூட்டமாக, நடுப்பகலி லேயே வந்து குவிந்துவிட்டனர்

மாலை நெருங்க நெருங்க அரண் மனை வாயிலும, கடைத்தெருவும் மக்கள் கூட்டத்தால் முற்றுகை யிடப்பட்டன.

மாலை 6 மணி முதலே, தான் பிறந்த ஊர் என்பதாலோ என் னவோ, தோழர் (நாகூர்) அனீபா அவர்கள் இன்னிசை முழக்கத் துவங்கிவிட்டார்.

ஆவலோடு 'காத்துக்கிடந்த மக் களுக்கும், கழகத் தோழர்களுக்கும் மகிழ்ச்சி தரும் வண்ணம் 'அண்ணா அவர்கள் வந்தாயிற்று' என்ற செய்தி ஏழு மணி சுமாருக்குக் கிடைத்தது.

கூட்டம் துவங்கிற்று; தோழர் அனீபா, 'அழைக்கின்றார், அழைக் கின்றார் அண்ணா,' என்ற பாடலை அண்ணா அவர்கள் மேடைக்கு வந்த தும், தனக்கே உரித்தான கவர்ச்சி மிகுந்த உச்சக்குரலில் பாடிய போது, கூட்டத்தவர், நிலை மறந் தனர்.

தோழர் வேதக்கண்ணன் முன் மொழிய தோழர் தங்கப்பன் வழி மொழிய அருப்புக் கோட்டைத் தோழர் எம்.எஸ்.இராமசாமி அவர் கள், கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

அவர் சிறிது நேரம் பேசியதும், அண்ணா அவர்களுடன் வந்திருந்த தோழர் மதுரை எஸ். முத்து அவர்கள் சிறிது நேரம் பேசுகை யில் குறிப்பிட்டதாவது :—

"நான் இந்த மாவட்டத்தில் பிறந்தவன்; பிழைப்பிற்கு வழி யின்றி, மதுரை சென்றேன்; இப்படித்தான் என்னைப்போன் றோர், எத்தனையோ இலட்சம் பேர், நம் மாவட்டத்தைவிட்டு மதுரைபோன்ற வெளிமாவட் டங்களுக்கு மட்டுமல்ல— இலங்கை, பர்மா போன்ற வெளிநாடுகளுக்கும் சென்று அவதியுறுகின்றனர். அந்த அவல நிலை—ஏன், நம் மாவட் டத்திற்குக் குறிப்பாகவும், நம் தென்னாட்டிற்குப் பொதுவாக வும் ஏற்பட்டது என்பதைச் சிந்திக்க—சிந்தித்து அதன்படி செயல்பட உங்களைக் கேட்டுக் கொள்ளத்தான் அண்ணா அவர் கள், இங்கே வந்திருக்கிறார் கள்"

என்று குறிப்பிட்ட காட்சி, மிக, உருக்கமாக இருந்தது.

அடுத்து தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் அவர்கள் சிறிது நேரம் பேசிவிட்டு, அண்ணா அவர்களுக்கு நகர தி.மு.கழகத்தின் சார்பில் வரவேற்பு இதழ் ஒன்று வாசித்தளித்து, கைத்தறி ஆடை யும் போர்த்தினர்.

பல்வேறு ஊர்கிளைக் கழகங்கள், மன்றங்கள், தனிப்பட்டோர் சார் பில் அண்ணா அவர்களுக்கு ஏரா மான கைத்தறி ஆடைகள், [illegible] மாலைகள், காலணா மாலைகள் அ[ணி] விக்கப்பட்டதுடன், வரவேற்[பு] இதழ்களும் வாசித்தளிக்கப்பட் டன.

'அண்ணா அவர்களே! [illegible] ளுக்கு எழுத்த வேலை [illegible] என்பதால், இந்தப் பே[னா] அன்பளிப்பாகத் தருகிறேன்' என்று சிறுவன் [illegible] மூன்று அங்குல நீள[illegible] பேனா ஒன்றை அண்ணா அவர்க[ளி] டம் தந்த காட்சி கண்கொள்ளா[க் காட்சி]யாயிருந்தது.

கீழக்கரைத் தோழர்கள், [illegible] கடலில் முத்துக் குளிக்கும் [illegible] விடர்கள் சார்பாக, பெ[illegible] வலம்புரிச் சங்கு ஒன்றினை, [illegible] பான சித்திர வேலைப்பா[illegible] செய்த அன்பளிப்பாகத் தந்[தனர்.] அதுபோன்ற வேறுபல [illegible] பொருள்களும் தரப்பட்டன.

பின்னர், அதிர்வேட்[டுகள்] முழங்க, வாணவெடிகள் [illegible] விப்புச் செய்ய, அண்ணா [அவர்கள்] கருத்துமழை பொழியத் [துவங்கி] னார்கள்.

கோட்டை வாயிலை மு[ன்] புறத்தேகொண்ட அரண்மனை [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

'பரம்பரையாகப் பயிரிட்டுவருபவர்களை சர்க்காரே வெளியேற்றுவதா?'

'புயல் - வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படும் நிவாரணத்தில் ஊழல்களேன்?'

'தாயக விடுதலை குறித்துச் சிந்திக்கும் தோழர்கள் 'வேதனை' தரும் பிரச்சினைகளையும் யோசிக்க வேண்டும்'

பரமக்குடி விவசாய மக்கள் நிலைமை பற்றி அண்ணா

மதுரை, ஜூன் 16—

"பரமக்குடி தாலுகாவில் உள்ள கிராமங்களில், கண்மாய்ப் பிரதேசங்களிலிருக்கும நிலங்களில் பரம்பரை பரம்பரையாக உழுது பயிரிட்டுவரும் விவசாயிகளை, இன்று, சர்க்காரே வெளி யேற்றுகிறார்கள்; இது அக்கிரமம்; அந்த விவசாயிகளை அந்த நிலங்களிலிருந்து வெளியேற்றக்கூடாது என்று கோரி இந்தக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள், கழகத் தோழர்கள்; கூடியுள்ள பல்லாயிரக் கணக்கான மக்களும் அந்தத் தீர்மானத்தை ஒரு மனதாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்; அதே போல, அண்மையில் வீசிய புயல்—வெள்ளம் இவற்றால் பாதிக்கப் பட்ட இப்பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிப்பதில் ஊழல்கள் மலிந்திருப்பதாகக் கண்டனத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றி யுள்ளார்கள்.

"இது போன்று, தி. மு. கழகத் தோழர்கள், தாயக விடுதலைக் கான வழிவகைகளைப் பற்றிச் சிந்திப்பதோடு, அந்த அந்த வட்டாரங் களில் உள்ள மேற்கண்டதுபோன்ற பிரச்சினைகளைக் குறித்தும் யோசிக்க முன்வந்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

"கூடியுள்ள மக்கள், இதுபோன்று, தங்களுடைய பிரச்சினை கள் என்ன? இந்தப் பிரச்சினை எப்படி எழும்பிற்று? இதற்கு நேர் முறையான பரிகாரம் என்ன? என்றெலலாம் யோசிக்கத் தலைபடும்போதுதான், நாட்டு அரசியல் நிகழ்ச்சிகளில், உண்மையான மாற்றங்கள் உண்மையான முன்னேற்றங்கள் ஏற்படமுடியும்.

"திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியல்ல; அல்லது சட்டசபையில் இடம் பெற்றிருக்கும் கட்சியுமல்ல; பெரிய பத்தி ரிகை பலம் கொண்ட ஒரு இயக்கமும் அல்ல; ஒதுக்கித் தள்ளப் பட்ட அரசியல் 'தீண்டாதவர்'களாகத்தான், சிலரால் கருதப்படு கிறோம; என்றாலும், கழகத்திற்கு நீங்கள் காட்டும், பேராதரவு, எங்களுக்கெல்லாம் பெருத்த நம்பிக்கையும் மகிழ்ச்சியும் தருவ தாகும்"

—என்று, அண்ணா அவர்கள், பரமக்குடி தி. மு கழகச் சார்பில் நடை பெற்ற கூட்டம ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

14—6—56 மாலை, முகவை[க்] கூட்டத்தை முடித்துக்கொண்[டு] அங்கிருந்து இரவு சுமார் 1[0] மணிக்கு புறப்பட்ட அண்ணா அவர் கள், சுமார் 11 மணி அளவில் பரமக்குடி வந்து சேர்ந்தார்கள்.

பரமக்குடி ஆற்றங்கரையில், அண்ணா அவர்களின் வருகைக்காக பல்லாயிரக் கணக்கான மக்கள் காத்துக்கிடந்தனர்; ஏராளமான தாய்மார்களும் அண்ணா அவர் களின் கருத்துக்களைக் கேட்[க] போக வந்திருந்தனர்.

அண்ணா அவர்கள் வந்ததும், கூட்டம் சுமார் 11-05 அளவில் துவங்கிற்று.

தோழர் முனியாண்டி முன் மொழிய, தோழர் முத்துராம[லிங்] கம் வழிமொழிய, இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் [illegible] வெற்றிவேல்[illegible] யன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

அடுத்து, தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், எம். எஸ். இராமசாமி, மதுரை எஸ். முத்து ஆகியோர் கழகக் கொள்கைகளை யும், இலட்சியத்தையும் விளக்கி பேசினர்.

அடுத்து, பரமக்குடி [illegible] விவசாயிகளில் ஒரு சாரா[illegible] பட்டுள்ள வேதனை [illegible] [illegible]

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 18-6—'56 திங்கள்

விபரீத ஏற்பாடு!

காங்கிரஸ் கட்சி நீங்கலாக வேறு ஒரு கட்சியும், மாகாண ஆட்சிப் பொறுப்பில் அமரக் கூடாது என்பது, அந்தக் கட்சியின் முடிந்த கருத்தாக இருந்து வருகிறது.

தனது உள்ளக் கருத்தைக் காங்கிரஸ் கட்சி வெளிப்படையாகக் கூறவில்லையானாலும், அது வெற்றிகரமாகச் செயல்படும் வகையிலேயே, காங்கிரஸ் ஆட்சியாளர்களின் நடைமுறை அனைத்தும் உருவாக்கப்படுகின்றன.

அக்கருத்து ஜனநாயக தத்துவத்திற்கு நேர் முரணானதாகும். அந்த உண்மையைத் தெரிந்திருக்கின்ற காரணத்தினால் தான், தம் உள்ளக்கிடக்கையை வெளிப்படையாகக் கூறவோ, பிறர் சுட்டிக்காட்டுவதை நேர்மையாக ஒப்புக்கொள்ளவோ காங்கிரஸ் கட்சி துணிவு கொள்ளாது, பசப்பி வருகிறது.

காங்கிரஸ் கட்சி வரலாற்றுச் சம்பவம் கொண்டது. தொலைந்தது தொலைய அக்கட்சிக்கு எஞ்சியுள்ள செல்வாக்கும், அவ்வரலாற்றுத் தொடர்பில் ஒட்டிக் கொண்டிருப்பதேயாகும்.

மற்ற அகில இந்திய கட்சிகளுக்கும், மாகாண கட்சிகளும், காங்கிரஸ் கட்சிக்கு இருப்பது போன்ற வரலாறு பலம் மதிப்பிடத் தகுந்தவகையில் அமைந்திருக்கவில்லை. அந்நிலையினால், மற்ற அரசியல் கட்சிகளுக்கு ஏற்படக்கூடிய இழுக்கு எதுவும் கிடையாது. இருந்தாலும், அத்தொடர்பு இல்லாததால், காங்கிரஸ் கட்சியைப் போன்று இல்லாது, பலத் தாழ்வாக இருக்கவேண்டிய நிலை மற்றக் கட்சிகளுக்கு இருக்கிறது.

மற்றக கட்சிகளுக்கு இயல்பாக இருந்துவரும இப்பலக் குறைவை, ஜனநாயக வளர்ச்சியல் தனக்குத் திரிகரண சுத்தியான நம்பிக்கையும் ஆசையும் இருக்குமானால், அறவே பொருட்படுத்தாது இருக்க வேணடும் காங்கிரஸ் கட்சி. ஆனால், அப்பலக் குறைவையே தனக்கு ஒரு வெற்றிக்கான பலத்த வாய்ப்பாகக் கொள்ளுவதில் வெட்கப்படாமல், எதிர்க் கட்சிகளைத் தூற்றித் திரிவதில், இயல்பான அக்குறைப்பாட்டையும் ஒரு சிறந்த காரணமாகக காங்கிரஸ் கட்சி கொள்ளுகிறது.

கடந்த எழெட்டு ஆண்டுக் கால ஆட்சியில் மக்களிடம் தனக்கிருந்த பிடிப்பை காங்கிரஸ் கட்சி கணிசமாக இழந்துவிட்டிருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும். தத்துவ ரீதியாக, காங்கிரஸ் கட்சி பலமிழந்து கிடக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

தங்களின் ஆரம்பக் காலத்தையே ஒரு குறைபாடாகக் கொண்டு விளங்கும் மற்ற கட்சிகளுக்கு இயல்பாக இருக்கக்கூடிய பலத் தாழ்வு, செல்வாக்கை இழந்து கிடக்கிற காங்கிரஸ் கட்சியை, இன்று ஒரு பலம் பொருந்திய கட்சியாகக் கொள்ளுவதற்கும் மதிப்பிட்டுப் பேசுவதற்கும் பயன்பட்டுவருகிறது. இந்த ஒப்புவமை நியாயத்தைத் தவிர்த்து, காங்கிரஸ் கட்சியை பலமுடைய கட்சி எனக் கூறுவதற்கு, வேறு குறிப்பிடத் தகுந்த நியாயம் எதுவும் இல்லவே இல்லை.

காங்கிரஸ் கட்சிக்கும் மற்ற அரசியல் கட்சிகளுக்கும் அகில இந்திய ரீதியில் மட்டும்தான் இந்தத் தொடர்பு என்பதில்லை. மாகாண ரீதியாகவும் காங்கிரசுக்கும் மற்ற கட்சிகளுக்கும் உள்ள தொடர்பு இதுவேயாகும்.

மாகாணங்களிலும் காங்கிரஸ் கட்சியை தனித்த முறையில் எதிர்த்து நின்று, பொதுத் தேர்தலில் தோல்வியுறச் செய்யக்கூடிய ஆற்றல், இப்பொழுது செயல்பட்டு வரும் எந்த ஒரு கட்சிக்கும் இருக்கவில்லை. தங்களை அகில இந்திய கட்சிகள் எனக் கூறிக் கொள்வதானாலும், மாகாணக் கட்சிகள் எனச் செப்பிக் கொள்வதானாலும், அவைகளினுடைய உண்மையான நிலை இதுவேயாகும்.

உருவான இலட்சியம், செயல்படுத்த வேண்டிய கொள்கை, மக்கள் தொடர்பு, சிறந்த அமைப்பு ஆகிய எதுவுமில்லாது, இரண்டொருவரின் தற்பெருமையை மட்டுமே கைமுதலாகக்கொண்டு அரசியலில் பட்டும்படாமலும் செயல்பட்டுவரும் கட்சிகளும், நாட்டில் நடமாடிவருகின்றன.

அத்தகு கட்சிகளுக்கு ஏதோ பலமிருப்பதாகக் கருதி, அதையும் ஒரு பொருட்டாகக் கொண்டு, அவைகளுடன் கூட்டாகச் சேர்ந்த மற்ற அரசியல் கட்சிகள், காங்கிரஸ் கட்சியை எதிர்க்க முனைந்தாலும், காங்கிரஸ் கட்சியை முறியடிக்க முடியுமா என்பது நிச்சயித்துக் கூறமுடியாத ஒன்றாகும்.

நாட்டில் நாம் காணும் பிரத்தியட்ச உண்மை இதுதான். இந்த உண்மையை காங்கிரஸ் ஆட்சியாளரும் நன்கு அறிந்தே இருக்கின்றனர்.

இருந்தாலும், மற்றக் கட்சிகள் கூட்டாகச் சேர்ந்து, பொதுத் தேர்தலில் தம்மை எங்கு தோற்கடித்துவிடுகின்றனவோ என்ற அச்சம் காங்கிரஸ் கட்சியை அச்சுறுத்திக் கொண்டு இருக்கிறது. எனவே, தனக்கு எதிராக மற்ற கட்சிகள் கூட்டு சேருவதை, சட்டப்படி தடுத்துவிட, காங்கிரஸ் தீர்மானித்துவிட்டது.

காங்கிரசிற்கு எதிராக அமைக்கப்படும் சர்வ கட்சி கூட்டணியை, ஒரு அரசியல் அமைப்பாக ஒப்புக்கொள்ள முடியாது என, இந்தியப் பேரரசின் தேர்தல்துறை கட்டளை பிறப்பித்திருக்கிறது.

காங்கிரஸ் நீங்கலாக மற்ற அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து உருவாக்கும் ஒரு முன்னணி அமைப்பை, அரசாங்கத் தேர்தல் துறைக்கு முன்கூட்டியே அறிவித்தபோதிலுங்கூட, அதை ஒரு அரசியல் அமைப்பாக ஒருக்காலும் அங்கீகரித்துக்கொள்ள முடியவே முடியாது என, திட்டவட்டமாக தேர்தல் துறை அறிவித்துவிட்டது.

இக்கட்டளையில் அடங்கியுள்ள பயங்கரமான உட்பொருளை தேசிய ஏடுகள் சுட்டிக் காட்டப்போவது என்றும் கிடையாது. அந்த நேர்மையான உள்ளம் நமது தேசிய ஏடுகளுக்கு பிறவியிலேயே கிடையாது.

ஜனநாயகக் கழுத்தறுப்பு மட்டுமே அக்கட்டளையில் அடங்கி இருக்கவில்லை. சர்வாதிகாரம் உருக்கொள்வதற்கான வித்திடலும அவ்வுத்தரவில் அடங்கி இருக்கிறது. எனவே, அதை விபரீத ஏற்பாடு என்றே குறிப்பிட வேண்டும்.

'பொதுவாழ்வு சீர்திருந்த வழி என்ன?'

'போலிவாதி'களுக்குப் பொதுமக்கள் பாடம் கற்பிக்க வேண்டும்'

'சுகவாழ்வுக்கு பொய்யும்-மோசடியும் மூலாதாரமாகி விட்டது'

"அரசியல், சமூக சேவை, கல்வி, மதம் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்; மோசடி ஆசாமிகளையும் யோக்கியப் பொறுப்பற்றவர்களையும் ஏராளமாகச் சந்திக்கலாம். திருப்பதி வெங்கடாசலபதி பெயரை சொல்லிக் கொண்டே அவரது திருப்பாதத்தை நம்பியவர்களுக்கும் (நாமம்) சாத்தி விடுவார்கள்.

"'பிழைக்க வழி தெரிந்தவர்கள்,' 'வாழ வகையறிந்தவர்கள்' என்ற மூடுமந்திரப் பேச்சுதான் இந்த மோசடிகளுக்குப் பெயர். இதற்காகத் தனி மனிதனை மட்டும் குறைசொல்லிப் பயனில்லை; சூழ்நிலையும் அந்த அளவுக்கு மாறிவிட்டது. சுகவாழ்வுக்குப் பொய்யும், மோசடியும அவசியம் என்பதை பெரும் அளவுக்கு உணர்ந்து விட்டனர்.

"அரசியல் பொதுவாழ்வு பெரும் பித்தலாட்டக்காரர்களின் வேட்டைக் காடாக மாறியதற்குக் காரணம், இரண்டு தீயசக்திகள்தான்! பணம் படைத்துப் பொதுவாழ்வில் பிரவேசிப்பவர்கள் எப்படியாவது பதவிக்கு வரவேண்டுமென்று நினைக்கிறார்கள். பணமில்லாமல் பொது வாழ்வில் பிரவேசித்ததர்கள் எப்படியாவது பணம் சம்பாதிக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள்.

"போலிவாதிகளுக்கு பொதுமக்கள் பாடம் கற்பிப்பதன் மூலமாகத்தான் பொது வாழ்வு சீர்திருந்த முடியும்.

"தேர்தல் நெருங்கும்போது எல்லோரும் பேச முன்வருவார்கள். சங்கீதக் கச்சேரியைப்போன்று 'பேச்சுக் கச்சேரி'க்கு ஊருக்கு நூறு—இருநூறு என்று வசூலிக்கும் பேச்சாளர்களும் ஏராளமாகத் தோன்றுவார்கள். கூலிக்கு மாரடிக்கும்போது ஆசை வார்த்தைகளைக் கொட்டுவதும சகஜம். பேசும்போது, 'என்ன பேசுகிறான்?' என்பது முக்கியமல்ல; 'எதற்காக இப்படிப் பேசுகிறான்?' என்று சிந்திக்க வேண்டியதுதான் கேட்பவர்களின் கடமை.

"இந்த ரீதியில் சிந்திக்க ஆரம்பித்தால் உண்மையான பேச்சு எது? ஆசைவார்த்தை எது?—என்பது, சுலபமாகத் தெரிந்துவிடும.

"தேர்தல் நெருங்க நெருங்க, பொது வாழ்வில் பித்தலாட்டமும் தலைதூக்கி நிற்கும், வகுப்புவாதிகள், ஜாதிவாதிகள் கள்; பணவாதிகள், போலிவாதிகள் எல்லோரும் தோன்றுவார்கள். கேட்பவர்களுக்கு எந்த வேடம்பிடிக்குமோ அந்த வேடத்தைப் போட்டுக்கொள்வார்கள். தேர்தல் முடிந்ததும, அவர்களின் 'நாடகமும' முடிந்துவிடும. இத்தகைய போலிவாதிகளில் பாசாங்கு செய்யும் காந்தீயவாதியும தோன்றுவார்கள். அவர் விஷயத்தில் இன்னும் சர்வ ஜாக்கிரதையாக இருகக வேண்டும்.

"'தேர்தல் சந்தடியில் இவைகளையெல்லாம் யார் சார் கவனிக்கிறார்கள்? தற்குறியின் ஜனநாயகததில் பணமும், ஜாதியும் தான் செல்லுபடியாகும........' என்று என் ஆபீஸ் பையன் வேறு, 'தனக்கும் ஓட்டுரிமை இல்லையே' என்ற மனத் தாங்கலில் வேதனைக் குரலை எழுப்புகிறான்!"

—இவ்வாறு, 13-6-56 'நவ இந்தியா' இதழில், 'ஊர் வம்பு' என்ற தலைப்பில், 'யு. ஆர்.' என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

'அமைதி—ஒற்றுமை ஏற்பட இடமில்லை'

மாநிலப் புனரமைப்புக் குழு உறுப்பினர் அறிவுரை

"பம்பாய் நகரம் மகாராஷ்டிரத்தில் இருக்கவேண்டியதுதான், இந்தியப் பேரரசினரின் கீழ் வைத்திருப்பதென்ற முடிவை விரைவில் மாறறவேண்டும்"—என்று கூறியவர், மேற்கண்ட கோரிக்கைக்காகப் போராட்டம் நடத்தும் தலைவர்களில் ஒருவர் அல்ல— மாநில சீரமைப்புக குழு உறுப்பினர் பண்டித குன்ஸ்ருதான் அவ்வாறு கூறியிருக்கிறார்.

மேலும் அவர், 'பம்பாய் இருமொழி மாநிலமாக இருக்கலாமென்றது சீரமைப்புக் குழு; அதை ஏற்றுககொண்டிருந்தால் இப்போதைய தொல்லைகளே இருந்திருக்காது. அதை ஒதுக்கிவிட்டு மொழிவழி மாநிலங்கள் அமைக்க முற்படும்போது, பம்பாயை மகாராஷ்டிரத்தோடு சேர்ப்பதுதான் நியதியாகும் பம்பாய், இந்தியப் பேரரசின்கீழ் இருந்தால், அமைதியும், ஒற்றுமையும் ஏற்படாது,' என்றும அவர் விளக்கம் கூறியிருககிறார்; இந்திய அரசியல் மேதைகளுக்கு!

'மத்திய அமைச்சர்களின் நிர்வாகத் துறைகளில் அதிகமாக 4,000 பேர்'

'இவர்களைகுறைப்பதால் ஆண்டிற்கு ஒன்றரைக் கோடி மிச்சமாகும்'

சீர்திருத்தியமைக்கும் விசாரணைக் குழு கூறுகிறது

புதுடில்லி, ஜூன் 15—

"இந்திய அரசாங்கத்தின் ஒன்பது அமைச்சர்களின் நிர்வாகத் துறைகளில், தேவைக்கும் அதிகமாக ஏறக்குறைய நாலாயிரம் பேர்கள் உள்ளனர். இவர்களைக் குறைப்பதன் மூலமாக ஆண்டொன்றுக்கு ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் அரசாங்கத்திற்கு மிச்சமாகும்,"

என்று, பல்வேறு நிர்வாகத் துறைகளின் அமைப்பு, ஆட்கள் தேவை பற்றிய பரிசீலனை நடத்த நிதி, உள்நாட்டுத் துறைகள் இரண்டும் சேர்ந்து சீர்திருத்தியமைக்கும் குழு ஒன்று முடிவு தெரிவித்திருக்கிறது.

"உணவு, விவசாய நிர்வாகத் துறையின் 33 அலுவலகங்களிலும் உள்ள 1,339 பதவிகள் தேவையில்லை; உணவுக் கட்டுப்பாடு எடுக்கப்பட்ட பின்பு இத்துறைக்கு அதிகமான வேலையானாலும், இதில் வேலை பார்க்கிற ஆட்கள் என்னவோ தொடர்ந்து இருந்துவருகிறார்கள்; காலஞ்சென்ற ரபி அகமத் கித்வாய் மேற்கண்ட துறையின் அமைச்சராக இருந்தபோது, இந்தத் துறையை எடுத்துவிடவேண்டுமென்று கூறினார். வணிக, கைத்தொழில் அமைச்சரின் நிர்வாகத் துறையிலும் தேவைக்கும் அதிகமாக 900 பேர்கள் இருக்கிறார்கள்."

சென்ற நான்கு ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய விசாரணை வேலையை இக்குழு இன்னும் மேற்கொண்டிருககிறது. இன்னும் செய்தி, ஒலிபரப்பும் துறை கல்வித் துறை, வெளிநாட்டு விவகாரத் துறை ஆகிய துறைகளில் இக்குழு விசாரணை நடத்த வேண்டியிருக்கிறது.

'பலூசிஸ்தான் காந்தி' கைது

கராச்சி, ஜூன் 15—

'பலூசிஸ்தான் காந்தி' என்ற புகழ்பெற்ற கான் அப்துல் சமாத் கான் இன்று குவெட்டாவில் கைது செய்யப்பட்டாராம்.

'அரிசியைத் தேக்கி வைக்க வேண்டாம்'

அரசாங்கத்தின் வேண்டுகோள்

சென்னை, ஜூன் 15—

"நெல் சாகுபடி செய்கின்றவர்களும், அரிசி வியாபாரம் செய்யும் மொத்த வியாபாரிகளும் அரிசியைத் தேக்கிவைத்து, அதனால் அதன் விலையை உயர்த்தாமல், அதன் விலையை ஒரு நிலையானதாக ஆக்குவதற்குத் தங்களால் இயன்றவரையில் பாடுபட வேண்டும்,"

என்று, சென்னை அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரிசி விலையும், மற்றும் சில இன்றியமையாத பொருள்களின் விலைகளும் ஏறிகொண்டே போவதாகக் கூறப்படுவதாகவும், இது சம்பந்தமாகப் பொதுமக்கள் அஞ்ச வேண்டிய அவசியமில்லை என்றும் அரசாங்கம் விடுத்த பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

அரிசி விலை உயர்ந்துள்ள நகரங்களில் அரசாங்க அரிசி விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்றும் அச்செய்தி கூறுகிறது.

'நம்நாடு' 4-ம் ஆண்டு துவக்க விழா

அலுவலகத் தோழர்களின் அரும் பணிக்கு நெடுஞ்செழியன்; என். வி. நடராசன் பாராட்டு

அனைவரும் குடும்பப் பாசத்துடன் பணியாற்ற வேண்டுமென வேண்டுகோள்

'நம் நாடு' அலுவலகத் தோழர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நான்காம் ஆண்டு துவக்க விழா 15—6—56 இரவு 7 மணியளவில், 'அறிவக'த்தில் சிறப்புற நடைபெற்றது.

துவக்கத்தில் 'நம் நாடு' அலுவலகத் தோழர்களின் சார்பில் தோழர்கள் என். வி மதிவண்ணன், கோ. வெற்றிவீரன், இருவரும முறையே பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர் அவர்களுக்கு மலர்மாலை அணிவித்தனர்.

துவக்கத்தில் பேசிய துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், கடந்த மூன்றாண்டுகாலமாக 'நம் நாடு' புரிந்து வந்த பணியினையும், அது வெற்றிகரமாக நாட்டிலே உலவுவதற்கு அலுவலகத் தோழர்கள் ஆற்றிவரும் தொண்டினையும் பாராட்டி நன்றி தெரிவித்து, அலுவலகத் தோழர்களின் ஒத்துழைப்பு மேலும் மேலும் தேவை என்று கூறினர்.

'நம் நாடு' பொறுப்பாசிரியர் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் இதழின் முன்னேற்றத்திற்குத் தனனுடன் ஒத்துழைக்கும் தோழர்களின் பணியைப் பாராட்டி, அவர்களின் ஏழ்மை நிலையை எடுத்துச் சொல்லி, இதற்குத் தக்கதோர் பரிகாரம் செய்ய வேண்டும் எனப் பொதுச்செயலாளர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

இறுதியாகப் பேசிய பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'நம் நாடு' நான்காம் ஆண்டு விழாவினை அலுவலகத் தோழர்கள் கொண்டாடுவதைப் பாராட்டி நன்றி தெரிவித்தும், 'நம் நாடு' மற்றைய நாளிதழ்களைப் போல் வனப்பும், வளப்பமும், பளபளப்பும், இல்லையென்றாலும், தோழர்களின் கையிலே அது கேடயமாக விளங்க வெளிவரச்செய்ய ஒத்துழைக்கும் அலுவலகத் தோழர்கள் ஏழ்மை நிலையிலிருந்தாலும் கொள்கைப்பற்றின் காரணமாக அவர்கள் தொண்டாற்றி வருகிறார்கள் என்றும், அவர்களை தாம் பாராட்டவும் நன்றி செலுத்தவும் கடமைப்பட்டுள்ளதாகவும், அலுவலகத் தோழர்களின் நியாயமான கோரிக்கைகளை தாம் கவனித்துக்கொள்ளுவதாகவும், எவரும் முதலாளி—தொழிலாளி என்ற முறையில் நடந்துகொள்ளாமல் சமத்துவமாக பணிபுரிகிறார்கள் என்றும், திராவிட முன்னேற்றக் கழகம் பொதுத் தேர்தலிலே ஈடுபடுகின்ற நேரத்திலே இந்தச் சிறிய அளவு பத்திரிகையினால் நாம் காரியம் சாதிக்க முடியாது—அப்போது பெரிய அளவில்பத்திரிகை வந்தாகவேண்டும் என்றும், அதற்கு அலுவலகத் தோழர்கள் அனைவரும் ஒத்துழைத்து நல் ஆதரவைத் தரவேண்டும் என்றும், அனைவரும் குடும்பப் பாசத்துடன் பணியாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, விழாவிற்கு வந்திருந்தோர் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

துவக்க விழாவிற்கு தோழர்கள் சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி, பா. வாணன், ராசேந்திரன், போளூர்-சுப்பிரமணியம், முல்லை சத்தி; டி கே பொன்னுவேலு, தமிழ்ப்பித்தன், 'தென்றல் திரை' சாமுவேல், புலவர் தியாகராசன், வி. இராமசாமி ஆகியோரும், மற்றும் பல தோழர்களும் வந்திருந்தனர்.

விழாத் துவக்கத்தில் 'நம் நாடு' அலுவலகத் தோழர்கள், பொதுச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர் சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி, ப. வாணன் ஆகியோருடன் புகைப்படமெடுத்துக் கொண்டனர்.

விழா முடிந்த பின்னர், தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களின் பெருமுயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுவைமிக்க விருந்து அளிக்கப்பட்டது.

தோழர் கே இராமசாமி, வீரராகவலு ஆகிய இருவரும் சுவைமிக்க உணவு தயாரித்தனர். தோழர்கள் அர்சுனன், நீலன் ஆகிய இருவரும் உடனிருந்து தக்க உதவிகளை செய்தது குறிப்பிடத்தக்கது. (ந. கி)

தமிழக - ஆந்திர எல்லைத் தகராறு

ஆந்திரமே இனிமுயலவேண்டுமாம்

சென்னை, ஜுன் 15—

"தமிழகம்—ஆந்திரா ஆகியவற்றின் இடையேயுள்ள எல்லைத் தகராறு சம்பந்தமான பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடுத்த முயற்சியை ஆந்திர அரசாங்கம்தான் எடுத்துக் கொள்ளவேண்டும்,"

என்று, சென்னை நிதிமந்திரி சி. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

"தகராறுக்குரிய எல்லைப் பகுதிகள், கடந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களில் கண்டுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு, மொழி அடிப்படையில் இரு மாநிலங்களுக்கும் பிரிக்கப்படுதல் வேண்டுமென்று இரு அரசாங்கங்களும் ஒத்துக்கொண்டன; ஆனால், இதுவரையில் திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுக்கப்படாததால், இப்பிரச்சினையை நடுநிலையாளர்களின் தீர்ப்புக்கு விடும்படி அரசாங்கம் ஆலோசனை கூறியுள்ளது. இதைத் தீர்ப்பதற்கு எல்லைக் கமிஷன் அமைக்கவேண்டும் என்று சிலர் ஆலோசனை கூறியுள்ளனர்," என்றும் அவர் கூறியுள்ளார்.

நட்பு நிலைக்குமென நம்புகிறோம்!

இலங்கைப் பிரதமர் விளக்கம்!

கொழும்பு, ஜுன் 18—

'இந்தியாவிலிருந்து தாக்குதல் ஏற்பட்டால் பிரிட்டனுடன் இலங்கை செய்து கொண்டுள்ள தற்காப்பு ஒப்பந்தம், இலங்கையின் பாதுகாப்புக்கு ஏற்றதாக இருக்குமென்று நினைக்கிறீர்களா?' என்ற கேள்விக்கு, இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா கூறியதாவது:—

"இந்தியா, நட்புக்கேற்ற நாடென்றே நான் கருதுகிறேன். இந்தியாவிலிருந்து தாக்குதல் வருமென்று நான் எதிர்பார்க்கவில்லை; இந்தியாவுக்கும்—இலங்கைக்குமிடையே உள்ள நட்பு நிலைத்திருக்குமென்றே நம்புகிறேன்; இந்தியாவோ, வேறு எந்த நாடோ நம்மைத் தாக்கும் என்று எனக்குப் பயமில்லை.

"இங்கிலாந்துடன் மட்டும்தான் நெருங்கிய உறவு இருக்கமுடியுமா? இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இந்தோனிஷியா ஆகிய நாடுகளுடனும் இத்தகு ஒப்பந்தங்கள் ஏற்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்."

குந்தா திட்டத்திற்காக ரூ. 34 கோடி

தென்னாட்டிலுள்ள குந்தா-திட்டத்திற்கு ரூ 35,44,00,000 நிதி வசதி பெறுவதற்கு இந்தியப் பேரரசுக்கும்—கானடாவுக்குமிடையே விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இரண்டு மணி நேர கல்வித் திட்டம்

'சென்னை மாநிலத்தில் அமுல் செய்ய சாத்தியமில்லை'

வினோபா யோசனைக்கு சென்னை கல்வி அமைச்சர் தரும் பதில்

"ஆச்சாரிய வினோபா பாவே கூறிய இரண்டு மணி நேரக் கல்வித் திட்ட யோசனை நல்லதுதான்; இரண்டு மணி நேரக் கல்வித் திட்டத்தால், எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி கற்பிக்க முடியும்; ஆனால் சென்னை மாநிலத்தில் இதை அமுல் நடத்துவது சாத்தியமாக இராது,"

என்று, சென்னை கல்வி அமைச்சர் சி சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், கல்வி பற்றிய வெள்ளை அறிக்கையைத் தற்போது ஆராய்ந்துவரும் குழுவானது, இந்த யோசனையைப் பற்றி ஆராயாது எனக் கருதுகிறேன் என்றும் கூறியிருக்கிறார்.

மக்கள் குரலுக்கு மதிப்பு

அலகாபாத், ஜுன் 14—

1857-ம் ஆண்டில் நடைபெற்ற முதல் சுதந்திரப் போரின் நினைவாக இங்குள்ள வேப்பமரம் ஒன்றினை, வெட்டக்கூடாதென மக்கள் குரலெழுப்பியதன் காரணமாக, அவ்வாறு வெட்டப்படுவது அதிகாரிகளால் நிறுத்தப்பட்டுவிட்டது. இம்மரத்தில்தான், சுதந்திரப்போரில் ஈடுபட்டவர்கள் தூக்கிலேற்றப்பட்டனராம்

அம்பர் சர்க்காவில் உற்பத்தியாகும் துணியை விற்க முடியுமா?

உறுப்பினர்களிடையே கருத்து வேற்றுமை: மூலத் திட்ட எண்ணிக்கையை குறைக்க முடிவு?

புதுடில்லி, ஜுன் 15—

'அம்பர் சர்க்கா'க் குழு தன்னுடைய இறுதி அறிக்கையில் கையெழுத்திடுவதற்காக ஜுன் 23-ல் இங்கு கூடும். அதில் பல மறுப்புக் குறிப்புகள் அடங்கியிருக்கும் என்று தெரிகிறது. 'அம்பர் சர்க்கா'வை எப்படிப் பயன்படுத்துவது என்ற ஒவ்வொரு பிரச்சினையிலும் உறுப்பினர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன; ஆனால், 'அம்பர் சர்க்கா' மூலத் திட்ட எண்ணிக்கையைக் குறைப்பதில் உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்து காணப்படுகிறது.

நடைமுறை வருடத்தில் பரிசோதனை செய்யும் அடிப்படையில் 75 ஆயிரம் 'சர்க்கா'க்களை மட்டிலுமே உற்பத்தி செய்ய வேண்டும் என்று அக்குழு ஆலோசனை தெரிவித்துள்ளது. அதற்கு அடுத்த ஆண்டு 200 ஆயிரம் 'சர்க்கா'க்களை புகுத்தலாம் என்று அக்குழு கருதுகிறது. ஆனால் அதன் ஆதரவாளர்கள் 500 ஆயிரம் 'சர்க்கா'க்களைப் புகுத்த வேண்டும் என்று சொல்லி வருகிறார்கள்.

இந்தப் பரிசோதனைத் திட்டத்தில் இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாயும், அடுத்த ஆண்டு 3 கோடி ரூபாயும் செலவாகும்.

'அம்பர் சர்க்கா'வில் நூல் நூற்கும் ஒவ்வொருவரும் சிட்டத்திற்கு $1\frac{1}{2}$ அணா விகிதத்தில் ஊதியம் அளிக்கப்பட வேண்டும் என்று பெரும்பான்மையான முடிவால் அக்குழு தீர்மானித்தது. ஒவ்வொரு தொழிலாளியும் நாள் ஒன்றுக்கு சராசரி 4 சிட்டங்கள் நூற்று, ஆறு அணாக்கள் ஊதியமாகப் பெறலாம்.

விற்பனை செய்யும் கட்டத்தில் ரூபாய் ஒன்றுக்கு நான்கணாவை உதவி நிதியாக அளிக்கும் தற்போதைய திட்டத்தை அம்பர் சர்க்கா திட்டத்திற்கும் உபயோகிக்கலாம் என்ற கதர்க் குழுவின் சிபாரிசை அம்பர் சர்க்காக் குழு உறுப்பினர்கள் பெரும்பான்மையாக ஆதரிக்கின்றனர்.

மிகக் குறைந்த அளவில் உற்பத்திச் செய்யும சாதாரண சர்க்காவிற்குத் தரப்படும் அதே உதவியை அதிகமாக உற்பத்திச் செய்யும் சக்தி படைத்த அம்பர் சர்க்காவிற்கும் கொடுப்பது விந்தையான செயல் என்று சில உறுப்பினர்கள் கருதுகிறார்கள்.

ஒவ்வொரு அம்பர் சர்க்காவிலும் இரண்டு நபர்கள் அமர்த்தப்பட வேண்டும் என்று குழு சிபாரிசு செய்கிறது. (ஒருவர் பஞ்சைப் பட்டை போடுவதற்கும், நூலை முறுக்குவதற்கும்; மற்றொருவர் நூற்பதற்கும்) இதற்காக வரும் நடைமுறை ஆண்டில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பேருக்கு பயிற்சி அளிப்பது அவசியமாகிறது.

அம்பர் சர்க்காவை ஒரு குறிப்பிட்ட இடத்தில் உற்பத்திச் செய்வதைக் குழு ஆதரிக்கவில்லை. அதற்குப் பதிலாக கிராமத்துத் தச்சர்களே அந்த வேலையை மேற்கொள்ளலாம் என்று குழு கருதுகிறது; ஏனென்றால், பின்பு அதில் ஏற்படும் பழுதுகளைச் செப்பனிட அவர்களுக்கு உபயோகமாக இருக்கும்.

நூலை உற்பத்திச் செய்த பின்பு நெசவாளிகள் தாங்களே அதை உபயோகிக்கும் எண்ணத்தைத் தூண்ட வேண்டுமோ என்ற பிரச்சினையில் உறுப்பினர்களிடையே தீவிரமான பிளவு காணப்படுகிறது.

அம்பர் சர்க்காவில் உற்பத்திச் செய்யப்படும் நூலின் தரம் ஒரே மாதிரியாக இருக்காது என்பது ஒத்துக்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக நெசவாளியின் உற்பத்திக் குறைந்துவிடும் எனக் கருதப்படுகிறது.

மற்றும், ஒரு பிரச்சினைமீது உறுப்பினர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன. அது அம்பர் சர்க்காவில் உற்பத்தி செய்யப்படும் துணியை விற்க முடியுமா என்பதேயாகும்.

சீர்திருத்த விடுதிகள் ஏற்படுத்தத் திட்டம்

மாவட்டவாரியாக நிறுவப்படும்

புதுடில்லி, ஜுன் 14—

அடுத்த மூன்றாண்டுகளில் அரசினர் ஆதரவில் 80 சீர்திருத்த விடுதிகள் மாநிலம் ஒன்றுக்கு 5 வீதம் சீரமைக்கப்பட்ட புதிய மாநிலங்களில் நிறுவப்படுமாம்.

விபசார விடுதியினின்று மீட்கப்பட்டவர்களுக்கும், இளம் குற்றவாளிகளுக்கும், விடுதலையடைந்த கைதிகளுக்கும் மாவட்டவாரியாக 30 மாவட்டங்களில் தங்கும் விடுதிகள் ஏற்படுத்தப்படுமாம்.

1957 பிப்ரவரித் திங்களுக்குள் 20 சீர்திருத்த விடுதிகளும், 100 தங்கும் விடுதிகளும், மாவட்டங்களில் ஏற்படுமாம். இவ்வாண்டின் முதல் ரூ 3 கோடி இதற்காகச் செலவிடப்படும் எனத் தெரியவருகிறது

துணைப் பொதுச்செயலாளர் சுற்றுப் பயணம்

மாநில மாநாட்டின் முடிவுகள் குறித்து விளக்கம்

துறையூர் :

11—6—56 இரவு 7 மணிக்கு தி மு. கழகச் சார்பில், அரண்மனைப் பிள்ளையார் கோயில் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் முத்துக்கருப்பன் தலைமை வகித்தார். கூட்டத் துவக்கத்தில் தோழர்கள் மதுரை முத்து, டி. பி. அழகமுத்து, முகவை - ஆர். எஸ் பாண்டியன் ஆகியோர் பேசினர். இறுதியாகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முடிவுகளை விளக்கிப் பேசியதோடு, அண்மையில் முதலமைச்சர் காமராசர் தி. மு கழகத்தைக் குறித்தும், அதன் கொள்கையைப் பற்றியும பேசியுள்ள தர்க்க வாதங்களுக்குத் தக்க பதிலும தந்தார்.

துணைப் பொதுச் செயலாளருக்கு துறையூர் தி. மு. கழகச் சார்பில் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டதுடன், துறையூர் தி. மா. மு. கழகம், சீரம்பூர் தி. மு. கழகம், மாம்பறை தி. மு கழகம், செட்டிகுளம் தி. மு. கழகம், முருங்கப்பட்டி தி. மு. கழகம் மற்றும் சார்புக் கழகங்கள் ஆகியவைகள் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

திருக்கோயிலூர் :

திருக்கோயிலூர்—(கீழையூர்) தி. மு. கழகச் சார்பில் 12-6-56 மாலை 6-30 மணிக்கு பெண்ணையாற்றுத் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் வி. வே சுப்பிரமணியன் தலைமை வகித்தார். தோழர் தனராஜ், சிறிது நேரம் பேசிய பின், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் மாநில மாநாட்டின் முடிவுகளை விளக்கியும், பொதுத் தேர்தலில் கழகம் ஈடுபடப்போவது குறித்து முதலமைச்சர் செய்துவரும் தவறான பிரச்சாரத்திற்குத்தக்க பதில் தந்தும் பேசினர். துணைப் பொதுச்செயலாளருக்கு திருக்கோயிலூர், அரகண்டநல்லூர், கீழையூர் தி. மு. கழகக் கிளைகள் சார்பில கைத்தறி ஆடையும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

குடியரசுத் தலைவருக்கு அடிமைவேலை

தண்டனை விதிக்க அதிகாரம்—எகிப்தில் புதிய சட்டம்

லண்டன், ஜுன் 14—

முடியாட்சியை மீண்டும் ஏற்படுத்த முயற்சிப்பது—தேசத்துரோகம்— சட்டதிட்டங்களை மீறி அரசியல் சட்டத்தை திருத்துவது போன்ற குற்றங்களுக்காகக் குடியரசுத் தலைவர்மீது வழக்குத் தொடர்ந்து மரண தண்டனை அல்லது அடிமை வேலைபோன்ற தண்டனைகள் விதிக்க அதிகாரமளித்து எகிப்திய அரசினர் புதிய சட்டம் நிறைவேற்றியுள்ளனர்.

14 ஆண்டு பிரயாணம் செய்த தபால் கார்டு!

கல்கத்தா, ஜுன் 14—

14 ஆண்டுகட்கு முன்னர்—அதாவது, 22—12—1942-ல், கல்கத்தாவில் உள்ள ஒரு வியாபார நிறுவனத்தில் உத்தியோகம் பார்க்கும் ஒருவருக்கு அவருடைய உறவினர் ஒரு தபால் கார்டு எழுதி லக்னோவில் உள்ள தபால் பெட்டியொன்றில் போட்டாராம். அந்தக் கார்டு நேற்றுத்தான், அது அனுப்பப்பட்டவரிடம் போய்ச் சேர்ந்ததாம் கல்கத்தாவுக்கும்—லக்னோவுக்கும் உள்ள தூரம் 600 மைல். அந்தக் கார்டில், 1942-ம் ஆண்டு நடைபெற சுதந்திர இயக்கம் சம்பந்தமாக எழுதப்பட்டிருந்ததாம்.

அன்றுசப்-இன்ஸ்பெக்டர் —இன்று கவர்னர்!

அகமதாபாத், ஜுன் 13—

பம்பாய் கவர்னர் டாக்டர் ஹரே கிருஷ்ண மெஹதாப் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், போலீஸ்காரர்களின் அலுவல்கள் அனைத்தும் தனக்குத் தெரியுமென்றும், தான் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பதவியிலிருந்ததாகவும் தெரிவித்திருக்கிறார்.

ஆச்சாரியாரின் குழப்ப அரசியல்!

மாகாண சீரமைப்பு முயற்சியை 5-ஆண்டுக்குத் தள்ளிவைக்க வேண்டுமாம்!

சிறுபான்மையினர் (பார்ப்பனர்) பாதுகாப்புடன் வாழும் ஆட்சி அமைப்புத் தேவையாம்!

மாகாண ஆட்சி அமைப்புகளை ஒழித்துவிட்டு இந்தியப் பேரரசின் தனிப்பெரும் ஆட்சியை நிறுவ வேண்டுமாம்!

சென்னை, ஜூன் 17—
“நாட்டில் இப்போதுள்ள சண்டை சச்சரவுக்கான உணர்ச்சிகள் தணிந்து, அறிவு வெற்றிபெற வேண்டுமானால் மாநிலங்களைத் திருத்தியமைக்கும் வேலையை இன்னும் 5 ஆண்டுகளுக்குத் தள்ளிப் போடுதல் வேண்டும்,”

என்று, சி. இராசகோபாலாச்சாரியார் தம் கருத்தை வெளியிட்டார்.

இதையொட்டி அவர் கூறியதாவது :—

“கொள்கைக்கும், நடைமுறைக்கும் இடையே முரண்பாடு நீடித்துக்கொண்டிருப்பது நல்லதன்று; இந்நிலைமை, இறுதியில் பெருங்குழப்பத்தில்—அராஜகத்தில் கொண்டுபோய்விடும். சிந்தனைக்கும், செய்கைக்கும் அல்லது செய்ய அனுமதிக்கப்படுவதற்கும் இடையே நல்ல ஒற்றுமை இருந்தால்தான் சிரியதும் நிலையானதுமானதோர் ஆட்சியைக் காண இயலும்.

“பம்பாய் நகரம் மத்திய அரசாங்கத்தின் நேரிடையான நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு, முடிவான ஏற்பாட்டிற்கு இன்னும் 5 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று சொல்லப்படுகையில், அதே மாதிரியாக மாநிலங்களைத் திருத்தியமைக்க வேண்டும் என்ற திட்டமும் ஏன் 5 ஆண்டிற்குத் தள்ளிப்போடப்படக் கூடாது? 5 ஆண்டுகள்வரையில் இப்போதுள்ள மாதிரியே ஏன் இருக்கக்கூடாது?

“காலங்கடந்துவிட்டது என்று சமாதானம் கூறப்படுகிறது; ஆனால், இதுவரையில் என்ன செய்யப்பட்டிருக்கிறது? பேச்சு வார்த்தைகளும், சண்டை சச்சரவுக்கான கோப உணர்ச்சிகளும் ஏற்பட்டனவேயன்றி வேறொன்றும் நடைபெறவில்லையே! இவற்றைக் கொஞ்ச காலத்திற்கு அப்படியே விட்டுவிட வேண்டும். பிறகு இயற்கை அறிவற்ற போக்கினை வென்றுவிடும்; ஆத்திரமும் அடங்க வழி ஏற்படும்.

“இப்போது இரண்டே வழிகள்தாம் உள; அவை வருமாறு:—

1. பொருள் உற்பத்தி விரைவாகவும், பூரணமாகவும் அபிவிருத்தியடைவதற்கான கொள்கையின் அடிப்படையில் பல மாநிலங்களை ஒன்றுபடுத்தி பெரிய ராஜ்யங்களை அமைக்கலாம். ஒரு குறிப்பிட்ட சாதி அல்லது கோஷ்டி அல்லது மொழியினரின் குறுகிய மனப்பான்மைகளை பிரதிபலிக்காத பரந்த மனப்பான்மை கொண்டவர்கள் ஆட்சி நடத்த வாய்ப்பு இருக்கவேண்டும்; அவ்விதம் ஆட்சி நடத்துபவர்கள் சிறுபான்மையினர் பாதுகாப்புடன் வாழவொட்டாமல் அடிக்கும் குறுகிய மனப்பான்மை கொள்ளாமல் பாரத நாட்டின் பெருமைக்கும், நம்பிக்கைக்கும் உரியவர்களாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. இந்தியா முழுவதையும் பல மாவட்டங்களாகப் பிரித்து மத்திய அரசாட்சியொன்றின் கீழ்க் கொண்டு வரலாம். ஒவ்வொரு மாவட்டமும் ஒரு திறமை வாய்ந்த நிர்வாகியின் பொறுப்பில் இருக்கவேண்டும்; அவர், மத்திய அரசாங்கம் இடும் உத்திரவுகள்படியும் ஆலோசனைகள்படியும் நடக்க வேண்டும்.”

தென்பாண்டிமண்டலத்தில் அண்ணா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாயில் எதிரில் அமைக்கப்பட்டிருந்த ஒளிஉமிழும் உயரமான மேடையில் நின்றுகொண்டு அண்ணா அவர்கள் கருத்துவழங்கிய காட்சி என்றும் நினைவில் தங்குவது! கண்டோர் மட்டுமே நினைத்துப் பார்த்துக்கொள்ளத்தக்கது!

நாட்டு அரசியல் நிலைகளை விளக்கியும், கழகக் கொள்கைகளை—இலட்சியத்தை சிறப்பாக எடுத்துரைத்தும் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தி, அண்ணா அவர்கள், முகவை மக்களின் நெடுநாளைய ஆவலைப் பூர்த்தி செய்தார்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டம், மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற நகரக் கழகத் தோழர்கள் தர்மலிங்கம், தங்கப்பன், க. மணி, இராமன், ஜெயபாரதி, இப்ராகீம், முஸ்தபா, ஆறுமுகம், ஆண்டிச்சாமி, சுல்தான் இன்னும் பலரும் வெகுவாக உழைத்தனர்.

அண்ணா அவர்களின் வருகையை ஒட்டி, இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள எண்ணற்ற கிளையினரும், நகருக்குள் வரவேற்பு வளைவுகள் அமைத்து, உடன் ஒத்துழைத்து தங்கள் ஆவலை நிறைவேற்றிக்கொண்டனர்.

ஒளி, ஒலி ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்த ஏ. எம். சவுண்ட் சர்வீசார் அண்ணா அவர்களிடம் பாராட்டுப் பத்திரம் பெற்றுக் கொண்டனர்.

தட்சிணப் பிரதேசத்தை ஆதரித்து நிற்கும் மந்திரி ஒருவரை—இராமநாதபுரம் இராசா அவர்களை, சட்டசபைக்குக் காங்கிரஸ் சார்பில் தேர்ந்தெடுத்த இராமநாதபுரம் தொகுதி மக்கள், அண்ணா அவர்களின் கருத்துரை கேட்டு, புதியதோர் விழிப்புணர்ச்சியைப் பெற்றனர்.

கூட்டம் இரவு 10 மணி அளவில் முடிவுற்றதும், தோழர் நாகூர் அனீபா அவர்கள் இல்லத்தில் உணவு அருந்திவிட்டு, அண்ணா அவர்கள், தோழர்கள் மதுரை முத்து, இராமசாமி, இல.ம. சௌந்திரபாண்டியன், காஞ்சி பாபு, முகவை—பாண்டியன் ஆகியோருடன் பரமக்குடிக் கூட்டத்திற்குக் காரில் சென்றார். (ந-தி.)

கான் அப்துல் கபார்கான் கைது

பாகிஸ்தான் அரசாங்கத்தின் மூன்று குற்றச்சாட்டுகள்

லாகூர், ஜூன் 17—

65 வயதான, செஞ்சட்டைத் தலைவர் கபார்கான் நேற்று இரவு தமது சொந்த கிராமத்திலிருந்து 8 மைல் தொலைவிலுள்ள ஒரு கிராமத்தில் கைது செய்யப்பட்டார்.

அவரது தமையன் தலைமையில் உள்ள மேற்கு பாகிஸ்தான் அரசாங்கத்தின் உத்திரவின்மீதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பா. பி. கோ. 123-ஏ, 124-ஏ, 153-ஏ ஆகிய பிரிவுகளின்கீழ், கீழ்க்காணும் குற்றங்கள் அவர்மீது சாட்டப்பட்டுள்ளன:—

1. பாகிஸ்தான் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாகிஸ்தானின் அரசுரிமை குறைய வேண்டுமென பொதுக்கூட்டங்களில் பேசியது.

2. பாகிஸ்தானின் பாதுகாப்பு, ஐக்கியம் ஆகியவற்றிற்குக் கேடு விளைவிக்கும் முறையில் மக்களின் மனதைத் திருப்பமுயலுவது.

3. பல்வேறு வகையான பிரிவுகளையுடைய மக்களிடையே பகைமையுணர்ச்சியையும் வெறுப்புணர்ச்சியையும் உண்டாக்குவது.

கான் அப்துல் கபார்கான் மீதுள்ள வழக்கு இத்திங்கள் 26-ம் நாள் விசாரிக்கப்படும் இதற்காகவென்றே ஷெர்அப்சல் என்பவர் பிரத்தியேக நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல் நடத்துவதற்குத் தேவைப்படும் அந்நிய செலவாணியைப் பெறுவதற்காக இந்தியா அயல் நாடுகளில் கடன் எழுப்பக்கூடும் எனத் தெரியவருகிறது.

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

கூட்ட ஏற்பாடுகள், ஒலி பெருக்கி, ஒளி விளக்கு முதலியவற்றை கழகத் தோழர்கள் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

பரமக்குடிச் சுற்றுவட்டாரத்திலிருந்தெல்லாம், மக்கள், பெரும் அளவில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி நவிலலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்தை முடித்துக்கொண்டு அண்ணா அவர்கள், இதர தோழர்களுடன், இரவே மதுரைக்குப் புறப்பட்டார்கள். (ந. தி.)

தி. மு. க. நிதி நாடகங்கள்

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிக்கும்

22—6—56	23—6—56
மு. கருணாநிதியின்	கருர் சேதுராமனின்
மணிமகுடம்	புது வெள்ளம்

நாடகங்கள்

நாகர்கோவில் இலட்சுமி தியேட்டரில்

டிக்கட் விவரம்: (ஒவ்வொரு நாடகத்திற்கும்)

ரு. 10, 5, 3, 1—8—0, 0—12—0

பெண்கள் பெஞ்சு: 0—12—0

—நா. மா. தி. மு. க.

உயர்தர மூங்கில்கள்! சிறந்த கீற்றுகள்!

பெரிய கொட்டகைகளும் பந்தல்களும் அமைப்பதற்கேற்ற

எல்லாவகையான மூங்கில்களும்

3 அடி, 4 அடி, 6 அடி நீளமுள்ள கீற்றுகளும்

குறைந்த விலைக்குக் கீழ்க்கண்ட இடத்தில் விற்பனையாகி வருகிறது. பெரும் வியாபாரிகளும் வாங்கிப் பயனடையலாம்.

கிடைக்குமிடம்:

என். எஸ். பங்களா

சங்கரம் பிள்ளை ரோடு, திருச்சி டவுன்

பரமக்குடியில் அண்ணா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தம், கீழ்க்கண்ட தீர்மானங்கள் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டன.

1. பரமக்குடி தாலுகா கிராமப் பகுதிகளிலுள்ள கண்மாய்களில் (குளங்குருவை) நீர்படி நிலங்களில், ஒரு அடி தண்ணீர் நிற்கும் நிலங்களெல்லாம் சர்க்காருக்குச் சொந்தமென்று கூறி, அந்நிலங்களில் சாகுபடிசெய்யும் விவசாயிகளைச் சர்க்கார் மேற்படி நிலங்களிலிருந்து வெளியேற்றுகிறார்கள். இந்த உத்தரவால் பஞ்சப் பிரதேசமாகிய இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்; ஆகையால், சென்னை சர்க்கார் நீர்படி நிலங்களிலிருந்து விவசாயிகளை வெளியேற்றாமல் இருக்கும்படியாகச் செய்ய வேண்டுமென்று இக்கூட்டம் சென்னை முதல் மந்திரி கனம் காமராசர் அவர்களையும், இந்தத் தீர்மானத்தைச் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வரும்படி திராவிடக் கட்சி உறுப்பினர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்களையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

2. கடந்த டிசம்பர் மாதத்தில், தென்னாட்டில் புயல் அடித்து ஓய்ந்த பிறகு, சென்னை சர்க்கார், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ‘தனிக் கடன்’ (Special Loan) கொடுக்கும்படியாக உத்திரவிட்டார்கள்; அதன்படி பரமக்குடி தாலுகாவிலும் கொடுத்து வந்தார்கள்; திடீரென கிராமக் கணக்குகளிலே, 8 அணா 10 அணா விதம் போட்ட கிராமங்களுக்கு ‘ஜீவனாம்சக் கடன் கொடுக்க முடியாது’ என்று சொல்லிவிட்டார்கள். காரணம் என்னவென்று கேட்டால், ‘மே 10-ந் தேதியிலிருந்து, கொடுக்காதே’ என்று உத்திரவு வந்திருக்கிறது என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள்; ஆகையால், மே 10-ந் தேதிக்கு முன்னால் கொடுத்ததுபோலவே, எல்லாக் கிராம மக்களுக்கும் பாரபட்சம் காட்டாது ‘கடன்’ கொடுக்கும்படியாக இக்கூட்டம் சென்னை சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறது.

3. திருவாவடுதுறை ஆதீனம் மடத்தைச் சேர்ந்த மா. சுந்தனேந்தல், பிராமணக் குறிச்சி, கொடிமங்கலம், கொன்றக்குளம், வல்லக்குளம் ஆகிய கிராமங்களை 1948-ம் வருடத்திய ‘ஜமீன் ஒழிப்பி’ன் சட்டப்படி சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்டன; ஆனால், திருவாவடுதுறை ஆதீனம், சர்க்கார் மேல் வழக்குத் தொடர்ந்து, மேற்படி கிராமங்கள் எல்லாம் எங்களுக்கே சொந்தமென்று சொல்லி, வழக்கும் நடந்து கொண்டிருக்கிறது. மேற்படி வழக்கு நடந்து கொண்டிருக்கும்போதே, மா. சுந்தனேந்தல் கிராமத்தில் பரம்பரை பரம்பரையாக உழுதுகொண்டிருக்கிற விவசாய மக்களை நிலங்களிலிருந்து வெளியேற வேண்டுமென்று, ஆதீனத்தார், விவசாயிகள் மேல் இராமநாதபுரம் ஆர். டி. கே. முன்னிலையில் வழக்குப் போட்டிருக்கிறார்கள்; இதனால், விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்; ஆகையால் சென்னை சர்க்கார் ஆதீனத்தின்மீது வேண்டிய நடவடிக்கை எடுத்து, ஆர். டி. கே. கோர்ட்டில் போட்டுள்ள வழக்கை ரத்துச் செய்யும்படியாகச் செய்ய வேண்டுமென்று இக்கூட்டம் சென்னை சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது. மேலும், ஆதீனத்தார் வசம் உள்ள எல்லா கிராமங்களையும் சர்க்கார் வசம் சேர்த்துக் கொள்ளும்படியும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

பின்னர், அண்ணா அவர்களுக்கும், இதர தோழர்களுக்கும் பல்வேறு மன்றங்கள், கழகங்கள் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் ஏராளமான அளவில் அணிவிக்கப்பட்டன.

கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் மகிழ்ச்சிப் பேராரவாரத்திற்கிடையே அண்ணா அவர்கள் எழுந்து, கழகத்தின் கொள்கைகள், இலட்சியம், இன்றைய அரசியல் நிலைகள் குறித்தும் அரிய விளக்கங்கள் அளித்து, சிறப்பானதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

அண்ணா அவர்கள் மேடைக்கு வந்து சேர்ந்தபோதும், பேச எழுந்தபோதும் வாணவேட்டுகள் போடப்பட்டன.

இரவு 11 மணிக்கு மேல் துவங்கிய கூட்டம் இரவு 2-15 மணி வரை நடைபெற்றது. கூடியிருந்த பல்லாயிரம் மக்களும், அந்த நடுநிசி கூட்டத்தில் அமைதியாக அமர்ந்திருந்து, கருத்துக்களைக் கேட்டுப் பயன்பெற்றது குறிப்பிடத் தகுந்தது.

(3-ம் கலம் பார்க்க)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.